SRI LANKA

## இலங்கை கணக்கீட்டுத் தொழிநுட்பவியலாளர்கள் கழகம்

# மட்டம் I பரீட்சை – ஜனவரி 2023

**(Level I Examination - January 2023)**

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

# (103) பொருளியல் (ECN)

**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்**

இல:540, வென் முருத்துவெட்டுவ ஆனந்த நயிமி மாவத்தை,
நாரஹேன்பிட்ட ,கொழும்பு 05
தொலைபேசி இலக்கம் : 011-2-559669

**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

## மட்டம் I - ஜனவரி 2023

## (103) பொருளியல்

## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(மொத்தம் 40 புள்ளிகள்) **பகுதி - A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**1.1** (2)

**1.2** (1)

**1.3** (3)

**1.4** (2)

**1.5** (1)

**1.6** (2)

**1.7** (2)

**1.8** (1)

**1.9** (3)

**1.10** (2)

**1.11** நேர்க்கணிய

**1.12** தனியுரிமை போட்டி

**1.13** தவறு

**1.14** சரியானது

## 1.15 நுண்பாகப் பொருளியில்

நுண்பாகப் பொருளியல் என்பது தனித்தனியான நிறுவனங்களினது நடத்தைகளை ஆராயும் பொருளாதாரத்தின் ஒரு பிரிவாகும். இது இத்தகைய சிறிய அலகுகள் வேறுபட்ட சந்தைகளில் பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்கின்ற போது வரையறுக்கப்பட்ட வளங்களை ஒதுக்கீடு செய்வது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்கின்றன என்பதை ஆராய்கின்றது. நுண்பாகப் பொருளியலானது, நுகர்வோர், உற்பத்தியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் தனித்தனியாகத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது பொருளாதார முறைமையில் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பதைப் பகுப்பாய்வு செய்கிறது, அது மிக எளிமையாக, மனிதரின் தெரிவுகள் மற்றும் வள ஒதுக்கீடு பற்றிக் கற்கின்றது.

உதாரணமாக:

- ஒரு பண்டத்தின் விலையானது சந்தையிலுள்ள கேள்வி மற்றும் நிரம்பல் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.
- நுகர்வோன் நடத்தை
- ஒரு நிறுவனத்தின் வருமானம் செலவு மற்றும் இலாப நிர்ணயம்
- அருமை, தெரிவு, வள ஒதுக்கீடு மற்றும் அமையச்செலவு பற்றிய ஆய்வு

### பேரினப் பொருளாதாரம்

பேரினப் பொருளியல் என்பது பொருளாதாரத்தை ஒரு பரந்த கண்ணோட்டத்தில் நோக்கும் பொருளாதாரத்தின் ஒரு கிளை ஆகும், அது பொருளாதாரத்தின் கழுகுப் பார்வைக் கண்ணோட்டமாகும். பேரினப் பொருளியலானது முழுமையான பொருளாதார முறைமையினதும் கட்டமைப்பு, நடத்தை மற்றும் செயற்திறன் ஆகியவற்றை ஆய்வு செய்வதுடன், ஒட்டுமொத்த பொருளியல் முறைமையும் தொழிற்படும் முறையினை ஆய்வு செய்யும். பொருளாதாரத்தில் உள்ள ஒவ்வொரு துறையும், எடுத்துக்காட்டாக, நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் பொருளாதார மாறிகள் போன்றவை. ஒட்டுமொத்த பொருளாதார அமைப்பு எவ்வாறு செயல்படுகிறது என்பதை கூட்டாக தீர்மானிக்கிறது. அதன்படியாக, குறித்த பொருளாதாரத் துறைகளின் ஒட்டுமொத்த நடத்தை, அத்தகைய நடத்தையை தீர்மானிக்கும் காரணிகள் மற்றும் அங்கு உருவாகும் பிரச்சினைகள் மற்றும் அத்தகைய நடத்தையால் ஏற்படும் விளைவுகள் ஆகியவை பேரினப் பொருளாதாரத்தின் கீழ் ஆய்வு செய்யப்படுகின்றன.

அத்தகைய பகுதிகளாவன:

- மொத்த வெளியீடு, வருமானம் மற்றும் செலவினம்
- பணவீக்கம், விலைமட்டம் மற்றும் பணநிரம்பல்
- நாணயமாற்று வீதம், வெளிநாட்டு வியாபாரம், சென்மதி நிலுவை
- வேலைவாய்ப்பு, வேலையின்மை மற்றும் பொருளாதார வளர்ச்சி
- பொருளாதார ஏற்றம், மந்தம் மற்றும் வீழ்ச்சி.

aat SRI LANKA

**1.16**

விலை மாற்றத்தின் வருமான விளைவு என்பது, நுகர்வோனின் பெயரளவு வருமானம் உள்ளடங்கலாக, குறித்த பொருளின் கேள்வியினைத் தீர்மானிக்கும் ஏனைய காரணிகள் மாற்றமின்றியிருக்க, குறித்த பொருளின் விலை மாற்றமடைவதன் காரணமாக, நுகர்வோனின் கொள்வனவு சக்தியில் ஏற்படும் மாற்றத்தினால் குறித்த பொருளுக்கான கேள்வியில் ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பிடும். (விலை மாற்றத்தின் மெய் வருமானத்தின் தாக்கம் காரணமாக குறித்த பொருளின் கேள்வியில் ஏற்படும் மாற்றம்).

**1.17**

**தெரிவுகள்**

அனைத்துப் பொருளாதாரங்களுமே வரையறுக்கப்பட்ட வளங்கள் மற்றும் வரையறுக்கப்படாத மனிதத் தேவைகள் மற்றும் விருப்பங்களுடன் போராடுகின்றன. எனவே, தனிநபர்கள் தங்கள் வரையறுக்கப்படாத தேவைகளை வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு திருப்திசெய்ய முயற்சிக்கின்றனர். பொருளாதார வளங்கள் பிரதியீடுகளைக் கொண்டுள்ளன. இந்த அனைத்துப் பிரதியீடுகளுமே ஒரே நேரத்தில் அடையப்பட முடியாது என்பதால், பொருளாதாரம் அல்லது மக்கள் சிறந்த மாற்றீட்டைத் தெரிவுசெய்தல் வேண்டும். எனவே, தெரிவுகளை உருவாக்குவது, மாற்றுப் பயன்பாடுகளுடன் பற்றாக்குறையான வளங்களை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் எதைக் கைவிடுவது என்பது பற்றிய தெரிவினை உள்ளடக்கும்.

உதாரணம்:

மாணவன் ஒருவன் ரூபா. 500 பணத்தை வைத்திருந்தால், அவனுக்குப் பின்வரும் மாற்றுத் தெரிவுகள் உள்ளன. ஒன்று அவனது வகுப்புக் கட்டணத்தை செலுத்தித் தீர்க்க முடியும், ஒரு கணிப்பானைக் கொள்வனவு செய்ய முடியும் அல்லது வங்கியில் வைப்பிலிட முடியும் என்னும் தெரிவுகளைக் கருத்திற்கொள்ளலாம்.

aat SRI LANKA

**அமையச் செலவு**

அமையச் செலவு என்பது ஒரு நோக்கத்திற்காக வளங்களைப் பயன்படுத்தத் தெரிவு செய்யும்போது இழக்கப்படும் அடுத்த சிறந்த மாற்றீட்டின் பெறுமதியாகும். அமையச் செலவு என்பது ஒரு தெரிவினை மேற்கொள்ளும்போது விட்டுக்கொடுக்கப்பட்ட அனைத்து மாற்றுத் தெரிவுகளினதும் பெறுமதியல்ல, ஆனால் அடுத்த சிறந்த மாற்றுத் தெரிவின் பெறுமதி மட்டுமே என்பதை இங்கே கவனிக்க வேண்டியது அவசியமாகும்.


**1.18**

1. பொருளாதார மற்றும் விலைமட்ட உறுதிப்பாட்டினைப் பேணுதல்
2. நிதிசார் ஸ்திரத்தன்மையைப் பேணுதல்
3. நாணயக் கொள்கையினை முகாமை செய்தல்
4. நாணய வெளியீட்டினை முகாமை செய்தல்
5. ஊழியர் சேமலாப நிதியத்தித்தினை முகாமை செய்தல்
6. பொதுப் படுகடன் முகாமை

7. பொதுப் படுகடன் முகாமை
8. நிதிசார் நுண்ணறிவு
9. உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஒதுக்கத்தினை முகாமை செய்தல்
10. வெளிநாட்டு நாணயமாற்று கொள்கையினை முகாமை செய்தல்
11. நுண் நிதியியல் மற்றும் பிராந்திய அபிவிருத்தி
12. கடைசி முயற்சியில் கடன் வழங்குபவர்

**1.19**

சமபயன் வளையி என்பது, ஒரு தனிநபருக்கு, அவர்களது பாதீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டு, சமமான திருப்தி அல்லது சமமான பயன்பாட்டை அளிக்கத்தக்க இரண்டு பொருட்களின் சேர்க்கையினைக் காட்டும் ஒரு வரைபடமாகும். சமபயன் வளையிப் பகுப்பாய்வின்படி, நுகர்வோர் சமநிலை என்பது கொடுக்கப்பட்ட நுகர்வோரின் சமபயன் வளையியில், பாதீட்டு வளையி அதிகபட்சமாக அடையக்கூடிய சமபயன் வளையியின் தொடுகோடு இருக்கும் புள்ளியுடன் தொடர்புடைய பொருட்களின் சேர்க்கையாகும். இந்தப் புள்ளியில், பாதீட்டு வளையியின் சாய்வானது சமபயன் வளையியின் சாய்வுக்கு சமமாக இருக்கும்.




**1.20 நிலைபேறான அபிவிருத்தி**

சுற்றுச்சூழலின் தரத்தினைப் பேணுவதுடன், உற்பத்தி மட்டத்தை மேம்படுத்தும் அதேவேளையில், அபிவிருத்தியின் நன்மைகள் மக்களிடையே பரப்பப்படுவதை உறுதிசெய்யும் போது ஒரு நாடு நிலைபேறான அபிவிருத்தியினை அடையத்தக்கதாக இருக்கும். சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் சமூகம் போன்ற அபிவிருத்தியின் அனைத்து அம்சங்களும் அடையப்படுதலே நிலைபேறான அபிவிருத்தியாகும்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், எதிர்கால சந்ததியினர் தங்கள் சொந்த தேவைகளை நிறைவேற்றுவதற்கான திறனை இழக்காமல் தற்போதைய தேவைகளை பூர்த்தி செய்யும் அபிவிருத்தி என நிலைபேறான அபிவிருத்தியினை வரைவிலக்கணம் செய்யலாம்.

***(02 புள்ளிகள் வீதம் , மொத்தம் 40 புள்ளிகள்)***

| *பகுதி **A** முற்றும்* |
| --- |

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

***அத்தியாயம் 02 - கேள்வி, நிரம்பல், சமநிலை மற்றும் அரசு தலையீடு செய்யும் வழிகள்***

**(a)**

**(i)** Qd = 17 – 0.05P
Qs = -1 + 0.1P

Qd = Qs ; சந்தை சமநிலையில்

17 – 0.05P = -1 + 0.1P
18 = 0.1P + 0.05P
18 = 0.15P
**120 = P**

Qd சமன்பாட்டில் பிரதியீடு செய்தல்

Qd = 17 – 0.05P
= 17 – (0.05×120)
= 17 – 6
**= 11 (Units)**

Or

QS சமன்பாட்டில் பிரதியீடு செய்தல்

Qs = -1 + 0.1P
= -1 + (0.1×120)
= -1 + 12
**= 11 (அலகுகள்)**

சந்தை சமநிலை விலை = ரூபா.120
சந்தை சமநிலை அலகுகள் = 11 (அலகுகள்)

aat SRI LANKA

***(04 புள்ளிகள்)***

**(ii)** அலகு வரி ரூபா 30/= இன் பின் நிரம்பல் சமன்பாடு
Qs = -1 + 0.1 (P – 30)
= -1 + 0.1P – 3
= -4 +0.1P

Qd = 17 – 0.05P
Qs = -4 +0.1P

Qd = Qs ; சந்தை சமநிலையில்

17 – 0.05P = -4 + 0.1P
21 = 0.1P + 0.05P
21 = 0.15P
**140 = P**

Qd சமன்பாட்டில் பிரதியீடு செய்தல் | QS சமன்பாட்டில் பிரதியீடு செய்தல்

$$Qd = 17 - 0.05P$$
$$= 17 - (0.05 \times 140)$$
$$= 17 - 7$$
**= 10 (அலகுகள்)**

Or

$$Qs = -4 + 0.1P$$
$$= -4 + (0.1 \times 140)$$
$$= -4 + 14$$
**= 10 (அலகுகள்)**

சந்தை சமநிலை விலை = ரூபா.140

சந்தை சமநிலை அலகுகள் = 10 (அலகுகள்)

*(03 புள்ளிகள்)*

**(b)**

நுகர்வோன் சமநிலை என்பது நுகர்வோர் ஒருவர் தனது வருமானத்தின் அளவை கொண்டு சந்தையில் தனது பயன்பாட்டின் உச்ச எல்லையை அடைந்து கொள்ளும் புள்ளி ஆகும். பொருளாதார வல்லுனர்கள் நுகர்வோன சமநிலையை அடையாளம் காணுவதற்கு இரண்டு வகையான அணுகுமுறைகளை பின்பற்றுகின்றனர் அல்லது இதனை வேறுவகையில் உற்று நோக்கினால் ஒரு பகுத்தறிவுள்ள நுகர்வுச் சந்தையில் நுகர்வோன் அதிகப்பட்ச திருப்தி நுகர்வுநிலையை எய்தும் நிலை அல்லது புள்ளி நுகர்வோன் சமநிலை என கருதப்படுகின்றது.

*(03 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

***அத்தியாயம் 01 - பொருளாதார எண்ணக்கருக்கள் மற்றும் வியாபார சூழல் தொடர்புடைய முறைமைகள்***

**(a)**

**பொருளாதார பண்டங்கள்**

எந்த ஒரு பொருள் அல்லது சேவையானது அதன் உற்பத்தியில் அருமையினையும் நுகர்வில் அமையச் செலவினையும் கொண்டிருக்குமாயின் அவை பொருளாதாரப் பண்டம் என கருதப்படுகின்றது. இப் பண்டங்கள் அருமையான வளங்களைப் பயன்படுத்தி, உற்பத்திக் காரணிகளை ஒன்றிணைத்து உற்பத்தி செய்யப்படும்.

உதாரணங்கள்:

- உணவு
- உடை
- மனைகள்
- கட்டடங்கள்
- பாடசாலை புத்தகங்கள்

**பொருளாதாரமல்லா பண்டங்கள்**

பொருட்கள் வரையறையின்றி நுகரக்கூடிய அளவிலும் மற்றும் பூச்சிய விலையில் எல்லையற்ற நிரம்பலைக் கொண்டதுமான பண்டங்கள் பொருளாதாரமல்லா பண்டமாக கருதப்படும். இவை மனிதனின் தலையீடுகளின்றி இயற்கையின் கொடையாக கிடைக்ககூடிய பண்டங்கள் ஆகும். எந்த வித மனித தலையீடுகளும் இன்றி இவற்றை வழங்க முடியுமாகையால் இவற்றை உற்பத்தி செய்யவோ நுகர்விற்கோ வளச்செலவுகள் அல்லது அமையச்செலவுகள் காணப்படாது.

உதாரணம் :

- சூரிய ஒளி,
- தூய வளி
- நீர்

***(04 புள்ளிகள்)***

| ***அத்தியாயம் 03 - உற்பத்தி செயன்முறையின் நடத்தைகள் மற்றும் வேறுபட்ட சந்தை முறைமைகள்*** |
|---|

**(b)**

| எண்ணிக்கை | மொத்த மாறும் செலவு (TVC) | சராசரி மாறும் செலவு (AVC) |
|---|---|---|
| 1 | 150 | 150 |
| 2 | 250 | 125 |
| 3 | 330 | 110 |

$$\text{சராசரி மாறும் செலவு} = \frac{\text{மொத்த மாறும் செலவு}}{\text{மொத்த உற்பத்தி}}$$

$$AVC = \frac{TVC}{Q}$$

***(03 புள்ளிகள்)***

**(c)**

**எல்லைச் செலவு (Marginal Cost (MC)**

ஒரு அலகு பொருளை மேலதிகமாக உற்பத்தி செய்யும் போது மொத்த செலவில் ஏற்படும் மாற்றம் எல்லைச் செலவு எனப்படும். மொத்த செலவின் மாற்றத்தை வெளியீட்டு மாற்றத்தினால் வகுப்பதன் மூலம் இது பெறப்படலாம்.

$$\text{எல்லைச் செலவு} = \frac{\text{மொத்த செலவில் ஏற்படும் மாற்றம்}}{\text{மொத்த உற்பத்தியில் ஏற்படும் மாற்றம்}}$$

$$MC = \Delta TC / \Delta Q$$

**எல்லை வருமானம் (Marginal Revenue)**

வெளியீடு மேலதிகமாக ஒரு அலகினால் அதிகரிக்கப்படும் போது மொத்த வருமானத்தில் ஏற்படும் மாற்றம் எல்லை வருமானம் எனப்படும். எல்லை வருமானத்தினை மொத்த வருமானத்தின் மாற்றத்தினை வெளியீட்டு அலகுகளின் மாற்றத்தினால் வகுப்பதன் மூலம் கணிப்பிடலாம்.

$$\text{எல்லைச் வருமானம்} = \frac{\text{மொத்த வருமானத்தில் ஏற்படும் மாற்றம்}}{\text{விற்பனை அளவில் ஏற்படும் மாற்றம்}}$$

$$MR = \Delta TR / \Delta Q$$

***(03 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## *வினா 04 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

***அத்தியாயம் 05 - நிதியியல் முறைமைகள் மற்றும் பணம் மற்றும் பொது விலைமட்டம்***

**(a) இலத்திரனியல் பணத்தினை பயன்படுத்துவதற்கான காரணங்கள்**

- இது மிகவும் நடைமுறையானது
- வாடிக்கையாளர்களைக் கவரும் எளிமையான மற்றும் விரைவான தீர்ப்பனவு முறைமை
- வினைத்திறன்மிக்க கொடுக்கல்வாங்கல் நேரம்
- கொடுப்பனவு செயன்முறையின் எளிமை
- நாணயத்தை விட பாதுகாப்பானது
- சர்வதேச கொடுப்பனவுகள் செலுத்தப்படலாம்
- வங்கிகளின் இணையத்துடன் இணைக்கப்படலாம்
- வணிக நிறுவனங்களிடையேயான போட்டி காணப்படும்

***(02 புள்ளிகள்)***

**(b) கடன் மதிப்பீடு தாழ்த்தப்படுவதற்கு வழிவகுத்த காரணங்கள்**

கீழே குறிப்பிட்ட காரணங்கள் தனித்தனியாகவோ அல்லது ஏனையவற்றுடன் இணைந்த வகையிலோ எதிர்க்கணிய தரப்படுத்தலுக்குக் காரணமாக அமையும்:

- உள்நாட்டு நிதி கண்ணோட்டத்திற்கு சவாலாக காணப்படுதல்
- வெளிவாரிக் கடன் மறுசீரமைப்பு
- வங்கித்துறை இறுக்கமான திரவத்தன்மையை எதிர்கொள்ளல்
- பாதீட்டு நிதி ஒருங்கிணைப்பை மையமாக கொண்டுள்ளது
- அரசியல் இடர்கள் நிதிசார் கண்ணோட்டத்தினை விஞ்சியுள்ளன
- உயர் பணவீக்கம்

aat SRI LANKA

- அந்நியநாட்டுக் கடன்களை செலுத்த முடியாமை
- வெளிநாட்டு நாணய கையிருப்பில் வீழ்ச்சி
- உல்லாசப் பிரயாணத்துறை போன்ற துறைகள் மூலம் வருமானத்தை ஈட்ட முடியாமை காரணமாக பாதீட்டு இடைவெளியின் சுருக்கம்
- நாட்டின் கடன்தீர் இயலுமையின் வீழ்ச்சி
- உத்தியோகபூர்வ மூலங்களிலிருந்து தற்போது கிடைக்கும் நிதியீட்டம் போதியதாகக் காணப்படாமை
- நாட்டின் உயர் பாதீட்டுப் பற்றாக்குறை
- நாட்டின் கடுமையான பொருளாதார சுருக்கம்

***(02 புள்ளிகள்)***

**(c)**

பொருளாதாரத்தில் உக்கிர பணவீக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் கட்டுப்பாடில்லாமல் வளரும் சூழ்நிலையினை குறிக்கின்றது. அதாவது மிகையான பணவீக்கம் என்பது அதிகப்படியான விரைவான விகித்தில் ஏற்படும் பணவீக்கத்தை குறிக்கின்றது. மிகையான பணவீக்கத்தின் விளைவுகள் வருமாறு.

**1. கொள்வனவு சக்தி வீழ்ச்சியடைதல்**

இது பணவீக்கத்தின் முதன்மையான மற்றும் பாரதூரமான விளைவு ஆகும். நிலையான அளவான பணம் படிப்படியாகக் குறைவான நுகர்வுக்கு வழிவகுப்பதால், காலப்போக்கில் விலைகளில் ஏற்படும் ஒட்டுமொத்த ஏற்றம் நுகர்வோரது கொள்வனவு சக்தியைக் குறைக்கும்.

**2. வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடைதல்**

பணவீக்கத்தால் மெய்வருமானம் வீழ்ச்சியடைவதால் நுகர்வோர் தமது அத்தியாவசிய கொள்வனவுகளைக் குறைப்பர். இது விளைவாக நுகர்வோரது வாழ்க்கைத்தரத்தைப் பாதிக்கும்.

**3. வட்டி வீதம் அதிகரித்தல்**

அரசு மற்றும் மத்திய வங்கி பண நிரம்பலைக் குறைப்பதற்காக வட்டி வீதங்களை அதிகரித்து உக்கிர பணவீக்கத்தினைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான அதன் வலுவைப் பயன்படுத்தும். இதனால் கடன் மீது அதிக வட்டி செலுத்தவேண்டி ஏற்படும்.

**4. குறுங்கல சேமிப்பினை அதிகரித்தல்**

அதிகரித்த பணவீக்கமானது காலப்போக்கில் சேமிப்பின் கொள்வனவு சக்தியை தேய்வடையவைத்து, சேமிப்பை ஊக்கமிழக்கச்செய்யும். அத்தகைய சுபீட்சம் நுகர்வோரை செலவிடுவதற்கும், வணிகங்களை முதலீடு செய்யவும் தூண்டக்கூடும்.

**5. உள்நாட்டு நாணயத்தின் பெறுமதியைத் தேய்வடையச் செய்தல்**

அந்நியச் செலவாணிச் சந்தைகளில், ஏனைய அந்நிய நாணங்களுக்கு எதிராக உள்நாட்டு நாணயத்தின் சார்பளவான பெறுமதி வீழ்ச்சியடைவதால் உக்கிர பணவீக்கமானது வேகமாக உள்நாட்டு நாணயத்தின் பெறுமதியைத் தேய்வடையச் செய்யும்.

**6. பணத்தினை அவசியமின்றி முடக்குதல்**

உயர் பணவீக்கம் காரணமாக அதிக விலை செலுத்துவதைத் தவிர்க்கும் ஒரு முயற்சியாக, தனிநபர்கள் பெரும்பாலும் இயந்திரங்கள், நகைகள் மற்றும் உபகரணங்கள் போன்வற்றில் முதலீடு செய்கின்றனர். நீடித்த உயர் பணவீக்க நிலைமைகளில், மக்கள் பழுதடையத்தக்க உருப்படிகளைக் களஞ்சியப்படுத்தி வைத்திருப்பர். எனினும், அத்தகைய நடத்தைகள் நச்சு வட்டத்துக்கு வழிவகுக்கும், விலைகள் உயர்வடைய, மக்கள் அதிக பொருட்களை சேமித்து வைக்க, அதன் காரணமாகப் பொருட்களுக்கான கேள்வி அதிகரிக்க, அது மேலும் பொருட்களின் விலைகளை அதிகரிக்கும். உயர் பணவீக்கம் முகாமை செய்யப்படாதவிடத்து, அது பெரும்பாலும்பாரிய பொருளாதாரத் தோல்விகளுக்கு இட்டுச் செல்லும்.

*(06 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

***அத்தியாயம் - 06 சர்வதேச வர்த்தகம் மற்றும் நாணயமாற்று சந்தை***

**(a)**

**டொலர் தேவைப்படுவதற்கான காரணங்கள்**

- சர்வதேச பல்கலைகழக கட்டணங்களை செலுத்துவதற்கு
- பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான இறக்குமதி கட்டணங்களை செலுத்துவதற்கு
- வெளிநாட்டு பயணங்களுக்கு
- வேறு சர்வதேச கொடுக்கல்வாங்களை தீர்ப்பனவு செய்வதற்கு
- வெளிநாட்டு சொத்து கொள்முதல் செய்வதற்கு
- வெளிநாட்டு கடன் தீர்ப்பனவு செய்வதற்கு
- வெளிநாட்டு கடன் வட்டிகள் தீர்ப்பனவு செய்வதற்கு
- வெளிநாட்டு முதலீடுகள் செய்வதற்கு.

*(02 புள்ளளிகள்)*

**(b)**

**(i)**

கொடுக்கப்பட்ட தரவுகளின் படி X பண்ட உற்பத்தியில் நாடு B யுடன் ஒப்பிடும் போது நாடு A க்கு குறைவான அளவு ஊழியர் அலகுகள் தேவைப்படுகின்றன. ஆகையால் நாடு A ஆனது பண்டம் X இனை உற்பத்தி செய்வதால் முழு நன்மையை அடையமுடியும். (X = நாடு A)

பண்டம் Y யினை உற்பத்தி செய்ய நாடு A யுடன் ஒப்பிடும் போது நாடு B ற்கு குறைவான அளவு ஊழியர் அலகுகள் தேவைபடுகின்றன. நாடு B ஆனது பண்டம் Y இனை உற்பத்தி செய்வதால் முழு நன்மையை அடையமுடியும். (Y = நாடு B)

*(02 புள்ளிகள்)*

**(ii)**

| | அமையச்செலவு- X | அமையச்செலவு Y |
|---|---|---|
| A | 4/8 =0.5 | 8/4= 2 |
| B | 6/3 = 2 | 3/6= 0.5 |

நாடு A பண்டம் X **இன் உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையினையும்** நாடு B பண்டம் Y உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையினையும் கொண்டிருக்கும்.

*(04 புள்ளிகள்)*

**(c) சென்மதி நிலுவையில் பதியப்படும் நடவடிக்கைகள்**

- பண்டங்களின் வர்த்தக நிலுவை
- சேவைகளின் வர்த்தக நிலுவை
- தேறிய முதன்மை வருமானம் (இது வெளிநாட்டு முதலீட்டு மூலம் ஈட்டிக்கொள்ளப்படும் வட்டி வருமானங்கள், தேறிய இலாபங்கள், உழைக்கப்பட்ட பங்கிலாபங்கள் மற்றும் வெளிநாட்டு பண அனுப்பல்கள் அதாவது வெளிநாடுகளில் வேலைசெய்யும் உள்நாட்டு தொழிலாளர்களின் பண அனுப்பல்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்)
- தேறிய இரண்டாம் தர வருமானம் :- (உலக அமைப்புகளின் ஆண்டுக்கான பங்களிப்பு, இராணுவ செலவிற்கான உதவி நிதி மற்றும் வெளிநாட்டு அபிவிருத்தி உதவி நிதி என்பன).
- சொத்துடமை மாற்றல்கள்
- நேரடி வெளிநாட்டு முதலீடுகள்
- பட்டியலிடப்படுத்தப்பட்ட பாய்ச்சல்கள்
- வங்கிகளின் நிலுவை பாய்ச்சல்கள்

*(02 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

**பகுதி B நிறைவு**

*(40 புள்ளிகள்)* **பகுதி - C**

## *வினா 06 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

***அத்தியாயம் 06 - தேசிய கணக்கீடு மற்றும் அரசாங்க நடவடிக்கைகளும்***

**(A)(a)**

**(i) மொத்த உள்நாட்டு செலவீனம் சந்தை விலையில்**

| விபரம் | ரூபா. மில்லியன் |
|---|---|
| தனியார் நுகர்வு செலவினம் | 2,500 |
| அரசாங்க நுகர்வு செலவினம் | 5,000 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 4,500 |
| இருப்பு மாற்றங்கள் | 2,456 |
| **மொத்த உள்நாட்டு செலவினம் (GDE) சந்தை விலையில்** | **14,456** |

*(05 புள்ளிகள்)*

**(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தி சந்தை விலையில்**

| விபரம் | ரூபா. மில்லியன் |
|---|---|
| மொத்த உள்நாட்டு செலவினம் சந்தை விலையில் | 14,456 |
| கூட்டுக : ஏற்றுமதிகள் | 2,800 |
| கழிக்க : இறக்குமதிகள் | (5,789) |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) சந்தை விலையில்** | **11,476** |

*(03 புள்ளிகள்)*

**(iii) மொத்த தேசிய வருமானம் சந்தை விலையில்**

| விபரம் | ரூபா. மில்லியன் |
|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி சந்தை விலையில் | 11,476 |
| கூட்டுக : வெளிநாட்டு நிகர முதன்மை வருமானம் | (50) |
| **மொத்த தேசிய வருமானம் (GNI) சந்தை விலையில்** | **11,417** |

*(02 புள்ளிகள்)*

aat SRI LANKA

**(b) அடிப்படை விலை (Basic price)**

ஓரு உற்பத்தியாளர் தாம் தயாரித்த பண்டம் அல்லது சேவையை விற்கத் தயாராகும் போது குறித்த பொருள் அல்லது சேவைக்குப் பொருத்தமான விலையானது அடிப்படை விலையென அடையாளங்காணப்படும். இவ் விலையானது கொள்வனவாளரிடமிருந்து உற்பத்தியாளருக்கு கிடைக்கப்பெறும். அடிப்படை விலையானது வரிகளை உள்ளடக்காது இருப்பதுடன், விற்பனையில் உற்பத்தியாளருக்குக் கிடைக்கப்பெறும் மானியங்களை உள்ளடக்கியிருக்கும். ஆனால், உற்பத்தியாளா் மீது வேறு வரிகள் விதிக்கப்பட்டிருந்தால், அவ்வாறு உற்பத்தி மீது விதிக்கப்பட்ட வரிகள் கழிக்கப்படல் வேண்டும். போக்குவரத்து செலவுகள் அடிப்படை விலையில் உள்ளடக்கப்படமாட்டாது. அடிப்படை விலையானது உற்பத்தித் தீர்மானத்துடன் தொடர்புபடும்.

*(02 பள்ளிகள்)*

**(B) பேரினப் பொருளாதாரக் கொள்கைகள்**

**1 நாணயக் கொள்கை (Monetary Policy)**

நாணயக் கொள்கையானது பின்வருவனவற்றின் மீது தாக்கம் புரிவதனால், அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி பண நிரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு அதனைப் பயன்படுத்தும்.

1. வட்டி வீதம்
2. நாணயமாற்று வீதம்
3. நாட்டின் விலைமட்டம் மற்றும் வருமான மட்டம்

பண நிரம்பல் மற்றும் வட்டி வீதம் என்பன .நாணயக் கொள்கையின் முக்கிய மூலகங்கள் ஆகும்.

aat SRI LANKA

**2 பாதீட்டுக் கொள்கை (The Fiscal Policy )**

இக் கொள்கை மூலம் அரச வருமானங்கள், அரச செலவினங்கள் மற்றும் அரச கடன்களில் மாற்றங்களை ஏற்படுத்தும் படிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அரச செலவினங்கள், வரியியல் மற்றும் அரச கடன்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் பாதீட்டுக் கொள்கை நடவடிக்கைகளில் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

**3 நிரம்பற் பக்க கொள்கைகள் (Supply side Policies)**

நிரம்பற் பக்க கொள்கைகள் ஒரு நாட்டின் உற்பத்தி இயலளவுகளை அதிகரிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் மொத்த நிரம்பல் அதிகரிக்கப்படும். இக் கொள்கைகள் உற்பத்திக் காரணிகளின் அளவு மற்றும் பண்புகளை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளதுடன், தனியார்மயமாக்கல், ஒழுங்குவிதிமுறைநீக்கம் மற்றும் வரிச் சீர்திருத்தங்கள் ஆகிய நுட்பங்கள் இதற்காக செயற்படுத்தப்படுகின்றன.

**4 வருமானக் கொள்கை (Income Policy)**

பொருளாதார அளவில் பரந்துபட்ட ஊதிய விகிதங்கள் மற்றும் விலை மட்ட அதிகரிப்பு போன்றவற்றைக் கட்டுப்படுத்த, பிரதானமாக பொருளாதாரத்தில் பணவிக்க அழுத்தங்களைக் குறைக்கப் பயன்படுத்தப்படும் கொள்கைகள்.

**5 வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை (Foreign Trade Policy)**

தடையற்ற சர்வதேச வர்த்தகத்தில் செல்வாக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையாகும். வரிகள் மற்றும் தீர்வைகள், ஏற்றுமதி மானியங்கள், இறக்குமதி அளவுத்திட்டங்கள், நாணயமாற்று விகித்தை கையாளுதல் போன்றன சாதகமான வர்த்தக நிலுவையை அடைவதற்கான கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**6 நேரடிக் கட்டுப்பாடுகள் (Direct Controls)**

தடையற்ற சந்தையில் தலையிட அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள், வளங்களின் உரிமை மற்றும் விநியோகத்தினை கட்டுப்படுத்துவதனை நோக்கமாக கொண்ட கொள்கைகள் மற்றும் சந்தை சக்திகள் மூலம் நிர்ணயிக்கப்படும் விலைகள் ஆகியன நேரடியான கட்டுப்பாடுகளாகக் கருதப்படுகின்றன.

*(04 புள்ளிகள்)*

**(C)**

**(a) அரசின் மீண்டெழும் செலவினங்கள்**

உற்பத்திச் செயன்முறைக்குப் பயன்படுத்தும் ஒருவருட காலப்பகுதிக்கு மேற்பட்ட சொத்துக் கொள்வனவுச் செலவுகள் மற்றும் மூலதன மாற்றல்கள் தொடர்பான அரச செலவினங்கள் தவிர்ந்த ஏனைய செலவினங்கள் அரசின் மீண்டெழும் செலவினங்கள் எனக் கருதப்படும்.

*(02 புள்ளிகள்)*

**(b) மூன்று முக்கிய மீண்டெழும் செலவினங்கள் காணப்படுகின்றன.**

- பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான மீண்டெழும் செலவினங்கள்
- வட்டிக் கொடுப்பனவுகள்
- மீண்டெழும் மாற்றல்கள் மற்றும் மானியங்கள்

*(02 புள்ளிகள்)*

*(மொத்தம் 20 புள்ளிகள்)*

*பகுதி C நிறைவு.*

## *Notice:*

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*